# யாருக்கு எது அலங்காரம்?

By S Nagarajan

**சம்ஸ்கிருத செல்வம்--அத்தியாயம்** 21

**கட்டுரை எண்**.807 **தேதி** 29-01-2014

பர்த்ருஹரியைப் போன்ற அபூர்வமான ஜனரஞ்சக கவிஞர்கள் பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறையே தோன்றுகின்றனர். எந்த சமயத்திற்கும் தேவையான உண்மைகளை இனிய சொற்களால் அழகாகச் சொல்வதே அவரது பாணி.

யாருக்கு எது அணி என்பதை அவர் நீதி சதகம் 80வது செய்யுளில் கூறுவதைப் பார்ப்போம்:-

**ஐஸ்வர்ஸ்ய விபூஷணம் சுஜநதா ஸௌர்யஸ்ய வாக் ஸம்யம:**
**ஞானஸ்யோபஸம: ஸ்ருதஸ்ய வினய: வித்தஸ்ய பாத்ரே வ்யய ।**

**அக்ரோத: தபஸ: க்ஷமா ப்ரபவிது தர்மஸ்ய நிர்வ்யாஜதா**
**ஸர்வேஷாமபி ஸர்வ காரண மிதம் சீலம் பரம் பூஷணம் ॥**

ஐஸ்வர்ஸ்ய சுஜநதா விபூஷணம்- யஜமானத்வமுள்ளவனுக்கு நல்ல மனிதனாக இருப்பதே அலங்காரமாகும்.
ஸௌர்யஸ்ய வாக் ஸம்யம: - சூரத்தனத்திற்கு அதிகமாகப் பேசாமல் இருப்பது அலங்காரமாகும்
ஞானஸ்ய - ஞானத்திற்கு
உபஸம: - சாந்தியும்
ஸ்ருதஸ்ய வினய: - படிப்பிற்கு வினயமும்
வித்தஸ்ய - பணத்திற்கு
பாத்ரே வ்யய- நல்லவனுக்குக் கொடுப்பதில் செலவு செய்வதும்
தபஸ:- தவத்திற்கு

அக்ரோத: - கோபமின்மையும்
ப்ரபவிது - ப்ரபுத்வம் இருப்பதற்கு
க்ஷமா - பொறுமையும்
தர்மஸ்ய - தர்ம அனுஷ்டானத்திற்கு
நிர்வ்யாஜதா - எந்த ஒரு வித காரணமும் இல்லாமையும்
அலங்காரமாகும்.

ஸர்வேஷாமபி - எல்லா மனிதர்களுக்கும்
ஸர்வ காரண - எல்லாவற்றிற்கும் காரணமான
இதம் சீலம் - சீலமானது
பரம் பூஷணம் - உயர்ந்த அலங்காரமாகும்.

யஜமானத்வமுள்ளவனுக்கு நல்ல மனிதனாக இருப்பதே அலங்காரமாகும். சூரத்தனத்திற்கு அதிகமாகப் பேசாமல் இருப்பது அலங்காரமாகும் ஞானத்திற்கு சாந்தியும், படிப்பிற்கு வினயமும் (அடக்கம்), பணத்திற்கு நல்லவனுக்குக் கொடுப்பதில் செலவு செய்வதும், தவத்திற்கு கோபமின்மையும், ப்ரபுத்வம் (தலைவராக) இருப்பதற்கு பொறுமையும், தர்ம அனுஷ்டானத்திற்கு எந்த ஒரு வித காரணமும் இல்லாமையும் அலங்காரமாகும். எல்லா மனிதர்களுக்கும் எல்லாவற்றிற்கும் காரணமான சீலமானது உயர்ந்த அலங்காரமாகும்.

நல்ல மனிதனாக இருத்தல், அதிகம் பேசாமல் இருத்தல், சாந்தி, வினயம், நல்லவனுக்குப் பாத்திரமறிந்து கொடுத்தல், கோபமின்மை, பொறுமை, தர்ம அனுஷ்டானத்தை எதையும் எதிர்பாராமல் யாரும் தூண்டாமல் செய்யல், சீலம் ஆகியவையே அனைத்து அணிகளுக்கும் காரணமாக அமைவதை பர்த்ருஹரி சொல்லும் அழகே அழகு!

****************